முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் தை மாதம் 10ம் திகதி முதல் தை மாதம் 17ம் திகதி வரை (23.01.2022 ஞாயிறு முதல் 30.01.2022 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தரும பலமாய் வந்த குருவே
   தவசியே ஆறுமுக அரங்கனே
   ஆறுமுகனார் சூட்சுமமாக நீ கேட்க
   அருளுவேன் இந்தியா தமிழகம் தன்னில்
2. தன்னிலே பிலவ கலை திங்கள்
   தசதிகதிமேல் மூவையீர் திகதி வரை
   இன்னாளில் நடக்கும் நிகழ்வாக
   எதிர்கால பலன்குறித்த ஆசிதனை
3. ஆசிதனை அகத்தியனும் உரைப்பேன்
   ஆற்றல்பட இயற்கை வழி
   ஆசியும் பாதுகாப்பும் பெற
   ஆறுமுகக் கடவுளை வணங்கவேணும்
4. வேண்டியே இந்தியா தமிழக ஆளுமை
   விழாக் காலம் கட்டுப்பாடு விதித்து
   வேண்டுதல் தொடர் வழிபாடுகட்கு
   வினவிடுவேன் அனுமதி இருத்தல் வேணும்
5. வேண்டியே இனமத பேதமில்லா
   வினவிட அனைவருக்கும் சமமாக
   உண்டான வழிபாடு தலங்கள் வழி
   உரிமை மீறலிலா நடத்தல் வேணும்
6. வேண்டியே இந்திய தமிழக மக்களும்
   வினை சூழா சுத்த நெறி பூசை
   தொண்டுள்ளம்பட தூய வழிகளான
   தெய்வநெறி அரங்கன் நெறி பின்பற்றி வரவேணும்

7. வேண்டி வேண்டி மக்களும் ஆளுமையும்
வேலவன் வழிபாடு தனையே
கொண்டாடி தருமபலம் கூட்டி
குறைவிலா ஆளுமை நடத்த

8. நடத்தவே பேரிடர் உயிர்பலி
நல்கா அகன்று முழுப்பாதுகாப்பு
இடரில்லா அமைதியும் தேற்றமும்
எல்லா மக்களும் கண்டடைய நேரும்

9. நேருமைபட அதிகார வர்க்கங்களும்
நெஞ்சில் வேலவன் வழிபாட்டுடன்
தருமவழி சேவை தொடர்ந்திட
தமிழகம் இந்தியா சகல துறை வாரியாக

10. ஆகவே வளர்ச்சிக் கண்டுமே
ஆற்றல்பட மக்களின் தேவைகள்
மிகைபட பூர்த்திபட நிலை மாறும்
மக்களின் மேலான ஆட்சி ஞான ஆட்சியாக மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் தை மாதம் 10ம் நாள் 23.01.2022 ஞாயிற்றுக் கிழமை முதல் தை மாதம் 17ம் நாள் 30.01.2022 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகள்:

எல்லையில்லா தர்மங்களை செய்து தர்மபலம் பெற்று தர்ம பலமாய் வந்துதித்த மகா குருவே மகா தவசியே ஆறுமுக அரங்க மகா தேசிகரே முருகப்பெருமானின் சூட்சும அவதாரமே தாம் இந்தியா தமிழகம் தனக்கு எதிர்காலம் குறித்து கேட்கவே அகத்திய மகரிஷி யானும் பிலவ வருடம் தை மாதம் 10ம் நாள் 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் தைமாதம் 17ம் நாள் 30.01.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்க விருக்கும் நிகழ்வுகளை வார ஆசியாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இயற்கை பேரிடர்களில் இருக்கும் பற்றும் உள்ள நச்சுக் கிருமி தாக்குதல்களில் இருந்தும் உலகை காத்திட மக்கள் பாதுகாப்பும் பெற வேண்டுமாயின் சர்வ வல்லமை பொருந்தியவரும் ஞானமே வடிவான தெய்வமாகிய முருகப் பெருமானை உலக மக்கள் ஏற்றுக் கொண்டு தவறாது வழிபாடுகளை செய்து வரவேண்டும்.

விழாக் காலங்களில் மக்கள் அதிகம் ஒன்று கூடுவதை கட்டுப்படுத்தும் அதே சமயம் கடவுள் வழிபாடு செய்வதற்கு தகுந்த வகையில் அனுமதி அளித்தும் இனமத பேதம் இல்லாமல் அனைத்து மத வழிபாட்டிற்கு தோதான வகையில் அனுமதிகள் அளித்தும் செயல்பட்டு வர தெய்வபலம் பெருகும்.

நாட்டுமக்கள் உயிர்பலி நீக்கி சுத்த நெறி வழி நடந்து தூயஞான நெறியான அரங்கர் காட்டும் சன்மார்க்க நெறிப்படி உயிர்பலி இல்லா பூசைகளை செய்து வர வேண்டும்.

மக்களும், மக்களை வழி நடத்தும் ஆட்சியாளர்களும் ஞானமே வடிவாகிய முருகப்பெருமானை வழிபாடுகள் செய்வதோடு அன்னதானத்தையும், தான தருமங்களையும் செய்து நாட்டினில் தருமபலத்தை பெருக்கி வர நாட்டினில் இயற்கை பேரிடர்களால் உயிர்பலி ஏற்படாமல் முழுமையான பாதுகாப்பையும், துன்பம் இல்லாது அமைதியான சூழ்நிலையும் உருவாகி தேசம் நல்ல முன்னேற்றத்தை அடையும்.

மக்களை வழிநடத்தும் அதிகாரிகள் மனதினுள் முருகப்பெருமானை வழிபாடுகள் செய்து தரும நெறி வழி நடந்திட இந்தியா தமிழகம் சகல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து ஆற்றல் பெருகி மக்களின் தேவைகள் எல்லாம் பூர்த்தியாகி மேன்மை அடைந்து மக்களின் ஆட்சிக்கும் மேலான தூய்மையான ஞான ஆட்சியாக மாறி சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–

முத்தமிழ் வித்தகன் முருகபிரான் திருவடியை
பற்றுடன் போற்றிட பரகதியும் கூடுமே

–முருகனடிமை ஓங்காரக்குடிலாசான்